

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 318 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 14 – வெள்ளிக்கிழமை 28 ஜூன் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 318 : Thiruvalluvar Year - 2055 - Aani 14 - Friday 28 June 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூலகம் - அறிவுசார் மையம்!

# ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2024) சட்டமன்றப் பேரவையில், ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்றும், திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்றும் விதி 110–ன்கீழ் அறிவித்தார்.

சென்னை, ஜூன் 28-

**ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்றும் திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விதி 110ன்கீழ் அறிவிப்பினை வெளியிட்டார்.**

**சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 110 விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உட்கட்டமைப்புக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைக்கப் போகும் மாபெரும் அறிவிப்பு ஒன்றையும், தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப் போகும் அறிவுலகம் வரவேற்கும் முக்கியமான அறிவிப்பு ஒன்றையும் இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### தமிழ்நாட்டை நோக்கி வரும் உலகத் தொழில் நிறுவனங்கள்!

நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ந்து வருகிறது. அதில் மிக முக்கியமானது பெருந்தொழில்கள். வளர்ச்சிமிகு தமிழ்நாடாகவும், அமைதிமிகு தமிழ்நாடாகவும் இருப்பதால், தமிழ்நாட்டை நோக்கிப் பல்வேறு நிறுவனங்கள் உலகம் முழுவதும் இருந்து தொழில் தொடங்குவதற்கு வந்து கொண்டேயிருக்கிறார்கள். இந்தத் தொழில் நிறுவனங்கள் மூலமாகத் தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சி அடைகிறது என்பது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் இளைய சக்தியான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

2022 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி தயார்நிலை குறியீட்டில் இந்தியாவிலேயே தமிழ்நாடு 'நம்பர்1' மாநிலமாக முன்னேற்றம் கண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மோட்டார் வாகனங்கள், உதிரி பாகங்கள், தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புத்தொழில் வளர்ச்சிக்கான மாநிலங்களின் தரவரிசையில்,

2020 ஆம் ஆண்டில் கடைசி நிலையில் இருந்த தமிழ்நாடு, தற்போது சிறந்த செயற்பாட்டாளர் அந்தஸ்தைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம்ஆண்டிற்குள் 'ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக' உயர்த்திட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இலக்கினை விரைவில் அடைவதற்காக, தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்து வருவதை இதன் மூலம் அறியலாம்.

### கிருஷ்ணகிரி – தருமபுரி பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி!

அனைத்து மாவட்டங்களிலும் தொழில்களைப் பரவலாக உருவாக்கி வருகிறோம். இதில் மின்னணு மற்றும் மின் வாகனங்கள் உற்பத்தித் துறையில் ஓசூர் கடந்த சில ஆண்டுகளில் முதலீடுகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது. இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்டு வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் நகரத்தினை, தமிழ்நாட்டின் முக்கியமான பொருளாதார வளர்ச்சி மையமாக உருவாக்குவதற்காக, அங்கு நவீன உட்கட்டமைப்புகளை அமைக்கும் நோக்கில், பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை தமிழ்நாடு அரசு தற்போது செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், ஓசூர் நகரத்திற்கான ஒரு புதிய பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு, அது முடிவடையும் தருவாயில் உள்ளது. ஓசூர் மட்டுமல்லாது, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி பகுதியின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஓசூரில் ஒரு விமான நிலையம் அமைப்பது அவசியம் என இந்த அரசு கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

> **"திராவிட இயக்கம் என்பது மாபெரும் அறிவியக்கம். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் தலைமை நிலையத்துக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் 'அறிவகம்' என்று பெயர்ச் சூட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதைய தலைமை நிலையத்துக்கு 'அறிவாலயம்' என்று பெயர்ச் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.கழகம் எங்கெல்லாம் கிளை பரப்பியதோ, அங்கெல்லாம் படிப்பகங்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் இயக்கமாக மட்டுமல்லாமல், தமிழ் இலக்கிய இயக்கமாகவும் வளர்ந்தது."**

ஓசூரில் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளைக் கையாளக்கூடிய வகையில், ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும்என்பதனை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### அண்ணா நூற்றாண்டு நூலகம் உருவாக்கி மகிழ்ந்தவர் கலைஞர்!

பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இரண்டாவது அறிவிப்பை வழங்க விரும்புகிறேன்.

திராவிட இயக்கம் என்பது மாபெரும் அறிவியக்கம். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் தலைமை நிலையத்துக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் 'அறிவகம்' என்று பெயர்ச் சூட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதைய தலைமை நிலை யத்துக்கு 'அறிவாலயம்' என்று பெயர்ச் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.கழகம் எங்கெல்லாம் கிளை பரப்பியதோ, அங்கெல்லாம் படிப்பகங்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் இயக்கமாக மட்டுமல்லாமல், தமிழ் இலக்கிய இயக்கமாகவும் வளர்ந்தது.

வாசிப்பதற்கும் சுவாசிப்பதற்கும் வேறுபாடு காணமுடியாத வாழ்க்கை வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பாதி வரை படித்த புத்தகங்களின் மீதியைப் படிப்பதற்கு ஏதுவாக அறுவை சிகிச்சையைத் தள்ளி வைக்கச் சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த பேரறிஞரின் நூற்றாண்டைக் கொண்டாடி மகிழ்ந்த தலைவர் கலைஞர், கோட்டூர்புரத்தில் எட்டு மாடிகள் கொண்ட, ஒரே நேரத்தில் 1200 பேர் உட்கார்ந்து படிக்கிற வகையில், மூன்று இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம் சதுர அடிகள் கொண்ட நூலகத்தை உருவாக்கி, அதற்கு 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

### மதுரையில் கலைஞர் நூற்றாண்டு மாபெரும் நூலகம் அமைத்தோம்!

அந்தவகையில், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வசிப்பவர்களும் நூலகங்கள் மூலம் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில், சங்கம் வைத்து மாத்தமிழ் வளர்த்த மதுரையில் 15.7.2023 அன்று கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டு, என்னால் திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் வாழ் பொது மக்களுக்கும் இளைய தலைமுறைக்கும் பயன்படும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தோம். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

### நெற்களஞ்சியம் பகுதியில் ஓர் அறிவுக் களஞ்சியம்!

அந்த வரிசையில் காவிரிக் கரையில் அமைந்த மாநகரமான திருச்சிராப்பள்ளி மாநகரில், உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்கு மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு வசதிகளை உள்ளடக்கி, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியப் பகுதியில் ஓர் அறிவுக் களஞ்சியமாக அது அமைந்திடும். தினந்தோறும் திட்டங்கள் தீட்டும் நாளாக, விடியும் நாளாக, விடியல் தரும் நாளாக உருவாக்கி வருகிறோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்.

---

## விவசாயம், தொழில்துறை, சேவை துறைகளுக்கு முன்னுரிமை

# மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி !

### நாடாளுமன்ற இருஅவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரை!



புதுடெல்லி, ஜூன் 28-

18வது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் என்பதால், இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரையாற்றினார். முன்னதாக குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து குதிரைப் படை புடைசூழ திரௌபதி முர்மு நாடாளுமன்றம் அழைத்து வரப்பட்டார். அவரை பிரதமர் மோடி, குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தொடரில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் முர்மு, மக்களவைத் தேர்தல் உலகின் மிகப்பெரிய தேர்தலாக நடந்துள்ளது என்றார். விவசாயம், தொழில் துறை, சேவைத்துறைக்கு சமமான முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக கூறினார். மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்ற சிந்தனையின் அடிப்படையில் முன்னேற்ற பாதையில் இந்தியா செல்வதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

### எதிர்க்கட்சிகள் முழக்கம்!

நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி குறித்து பேசினார். அப்போது அவையில் எழுந்து நின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மணிப்பூரில் நடைபெற்ற வன்முறை சம்பவம் தொடர்பாக பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முழக்கமிட்டனர். இதே போல், மருத்துவக் கல்லூரி குறித்தும், தேர்வு முறைகள் குறித்து குடியரசுத் தலைவர் பேசும் போது நீட் தேர்வுக்கு எதிராக இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முழக்கங்களை எழுப்பினர்.

---

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்த

# 1.48 லட்சம் விண்ணப்பங்கள் ஏற்பு !

### சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அறிவிப்பு !



சென்னை, ஜூன் 28-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில், சட்டப்பேரவையில், கொள்கை விளக்கக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டது. அதில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கென 2023-24ம் நிதியாண்டில் 8 ஆயிரத்து 124 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2024-25ம் நிதியாண்டிற்கென 13 ஆயிரத்து 722 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் மூலம் கடந்த மார்ச் 31ம் தேதி வரை முகாம் வாழ் இலங்கை தமிழர் குடும்பங்கள் உட்பட ஒரு கோடியே 15 லட்சத்து 27 ஆயிரத்து 172 மகளிர் பயனடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் உரிமைத்தொகை கோரி மேல்முறையீடு செய்தவர்களில் ஒரு இலட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்ட மேல்முறையீடு விண்ணப்பதாரர்கள் விரும்பினால், நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் இ-சேவை மையம் வழியாக மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.